**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**வா.சா. – 1 – சுரேஷ்**

**நாள். 17.07.2023**

**<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்குரையில் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என் தகப்பனார் பெயரை ஏ.சண்முகம் என்று காட்டியுள்ளார். வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் என் தகப்பனார் இறந்தார். 2ம் வாதி பழனியம்மாள் என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர். என் பாட்டனார் பெயர் ஆறுமுக கவுண்டர். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் கருப்பண கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தன. கருப்பண கவுண்டருக்கு அழகிய கவுண்டர், ஆறுமுக கவுண்டர் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். ஆறுமுக கவுண்டருக்கு நல்லம்மாள், மீனாட்சியம்மாள் என இரண்டு மனைவிகள். மூத்த மனைவி நல்லம்மாளுக்கு, இந்த வழக்கின் 3,4 வாதிகளும், 1ம் பிரதிவாதியும் அவரது மக்கள். மீனாட்சியம்மாளுக்கு இந்த வழக்கின் 1ம் வாதி, 2ம் வாதி, 2ம் பிரதிவாதி கலையரசி ஆகியோர்கள் அவரது மக்கள். வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2ம் வாதி பழனியம்மாள் இறந்துவிட்டார். அவரது வாரிசாக 5 முதல் 9 வாதிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாக அழகிய கவுண்டரும், அவரது மக்களும், ஆறுமுக கவுண்டரும் சேர்ந்து 07.12.1976ம் தேதிய பதிவான பாகப்பிரிவினை பத்திரம் மூலம் , சொத்துக்களை பிரித்து கொண்டார்கள். மேற்படி பத்திரத்தில் அழகிய கவுண்டரும், அவரது இரண்டு மக்களான நாச்சிமுத்து மற்றும் சின்னச்சாமி ஆகியோர்கள் 1வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளனர். அதில் என் பாட்டனார் ஆறுமுக கவுண்டர் 2வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார். அந்த ஆறுமுக கவுண்டரின் மூத்த மனைவி நல்லம்மாளும், அவரது மகன் 1ம் பிரதிவாதி முத்துச்சாமியும் 3வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளனர். ஆறுமுக கவுண்டரின் இளையமனைவி மீனாட்சியம்மாளின் மகனும், என் தகப்பனாருமான சண்முகம் என்ற ராஜண்ணா ஆகியோர்கள் 4வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளனர். 07.12.1976ம் தேதிய பாகவிஸ்தி பத்திரப்படி, அழகிய கவுண்டருக்கும், அவரது இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் ஏ செடியூல் சொத்துக்கள் வழங்கப்பட்டன. அந்த பாகப்பத்திரப்படி என் பாட்டனார் ஆறுமுக கவுண்டருக்கு பி செடியூல் சொத்துக்கள் வழங்கப்பட்டன. பி செடியூல் சொத்துக்கள் தான் வழக்கின் சம்பந்தப்பட்ட சொத்துக்கள். அந்த பாகப்பத்திரப்படி சி செடியூல் சொத்துக்களை ஆறுமுக கவுண்டரின் மூத்த மனைவி நல்லம்மாளும், 1ம் பிரதிவாதி முத்துச்சாமியும் அனுபவம் செய்து வந்தனர். டி செடியூல் சொத்துக்கள் ஆறுமுக கவுண்டரின் மகனான 1ம் வாதிக்கு வழங்கப்பட்டது. 07.12.1976 ம் தேதி பாகவிஸ்தி பத்திரப்படி, குடும்ப சொத்துக்கள் அனைத்தும் பாகம் செய்து

விட்டன. 07.12.1976ம் தேதிக்கு பின் அழகிய கவுண்டருக்கும், ஆறுமுக கவுண்டருக்கும் கூட்டு குடும்பம் என்ற அந்தஸ்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். அவரவர் பாகம் பிரித்து கொண்ட சொத்துக்களை, அவரவர் அனுபவம் செய்து கொண்டு தனித்து பிரிந்துவிட்டனர். என் பாட்டனார் ஆறுமுக கவுண்டரின் காலத்திலேயே அவரது மூத்த மனைவி நல்லம்மாளின் இரண்டு பெண் குழந்தைகளையும் (3,4 வாதிகளுக்கு ) நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நல்லம்மாளுக்கு 3,4 வாதிகளை தவிர நாச்சம்மாள் என்ற மற்றொரு மகள் உள்ளார். மேற்படி நாச்சம்மாள் திருமணமாகிய பின்பு தான் இறந்தார். மேற்படி பாக விஸ்தி பத்திரப்படி 1ம் பிரதிவாதி முத்துச்சாமி அவருக்கு கிடைத்த சொத்துக்களை கொண்டு தனியே பிரிந்து சென்று விட்டார் என்றால் சரிதான். 07.12.1976ம் தேதி பாகவிஸ்தி பத்திரப்படி, என் தகப்பனாருக்கு தான் டி செடியூல் சொத்துக்களாக அதிக அளவில் கொடுக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. மேற்படி பாகவிஸ்தி பத்திரப்படி என் தகப்பனாருக்கு தான் கூடுதலான சொத்துக்கள் கொடுக்கப்பட்டன என்றும், வழக்கிற்காக அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா பெயர் சரஸ்வதி. என் அம்மா 02.12.2014ல் இறந்துவிட்டார். என் தகப்பனார் மேற்படி பாகப்பிரிவினை செய்துகொண்ட பின், குடும்பத்துடன் நாங்கள் ஒசூரில் தங்கியிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி ஒசூர் விசாலத்தில் தான் என் அப்பா, என் அம்மா, மற்றும் எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆதார் கார்டு, குடும்ப கார்டு உள்ளது என்றால் சரிதான். நான் ஷேர் மார்க்கெட் வியாபாரம் செய்து வருகிறேன். என் தகப்பனார் ஒசூரில் லேவாதேவி (பணம் கொடுக்கல், வாங்கல்) தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். 2ம் வாதி பழனியம்மாளுக்கு என் பாட்டனார் காலத்திலேயே நல்ல முறையில் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் இரண்டாவது மனைவி மீனாட்சியம்மாளின் மகள் இரண்டாம் பிரதிவாதி கருப்பாயி என்ற கலையரசிக்கு தங்கவேல் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். 2ம் பிரதிவாதிக்கும், தங்கவேலுக்கும் பிறந்த மகள் தான் 3ம் பிரதிவாதி. 3ம் பிரதிவாதி பானுப்பிரியா பிறந்த சிறிது காலத்திலேயே அவரது தகப்பனார் தங்கவேல் 28.12.2001ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் மூத்த மனைவி நல்லம்மாள் ஆறுமுக கவுண்டர் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர், அவரது இளைய மனைவி மீனாட்சியம்மாள், அவர் மகள் 2ம் பிரதிவாதி ஆகியோர்களுடன் ஒரே குடும்பமாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டர் என் தகப்பனார் ராஜண்ணாவுடனும், முத்துச்சாமியுடனும் ஒன்றாக இருக்க வில்லை. அவர் தனியாக வசித்து வந்தார். ஆறுமுக கவுண்டர், தனது இளைய மனைவி மீனாட்சியம்மாளின் பராமரிப்பிலும், கவனிப்பிலும் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கணவர் தங்கவேல் இறந்துவிட்டதால், 2,3 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான ஆறுமுக கவுண்டருடன் ஒன்றாக இருந்து வந்தார்

என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை 2,3 பிரதிவாதிகள் தன்னுடைய எதிர் வழக்குரையில் 7 வது பாராவில் சொல்லியுள்ளனர் என்றும், அதை மறுத்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. 2,3 பிரதிவாதிகள் பெயரில் ஆறுமுக கவுண்டருக்கு இயற்கையிலேயே அன்பும், பாசமும் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் ஆறுமுக கவுண்டருக்கு 07.12.1976 ம் தேதிய பாகப்பிரிவினை படி கிடைத்த தனித்த சொத்துக்கள் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு கிடைத்த டி செடியூல் சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் தனது கடைசி காலத்தில் தனது இளைய மனைவியின் மகள்கள் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் பராமரிப்பில் இருந்து வந்ததால், தன் இளைய மனைவி மீனாட்சியம்மாளுக்கு 19.06.2005 ம் தேதி ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் எந்த விதமான உயிலும் எழுதவில்லை. அந்த உயிலை பின்னர் வேடசந்துார் நோட்டரி பப்ளிக் முன்பாக ரத்து செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் ஆறுமுக கவுண்டரின் கையொப்பம் போல் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் அதே ஆவணத்தில் உள்ள 3 ம் பக்கத்தில் உள்ள புகைப்படங்கள் ஆறுமுக கவுண்டர் மற்றும் அவரது மனைவி மீனாட்சியம்மாளின் புகைப்படங்கள் தான். மேற்படி ஆறுமுக கவுண்டரின் கையொப்பம் மற்றும் அவர்களது புகைப்படங்கள் மட்டும் பி.வா.சா.ஆ.1 என தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.17 17:34:05 +0530

Additional District Judge,

Dindigul.